gistered as a News
paperin Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

இலங்கைச்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புந். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞு தை மீ உருஉ (1947 பெப்ரவரி 7 வெள்ளிக்கிழமை) [இல ~~ருகூ~~ 84

# இயற்கையில் இறைவன்

[திருமதி க. ர. ஆதிலக்ஷ்மி அம்மையார்]

உலகில் இயல்பாய்த் தோன்றித் தம்முள் மாறுபடும் வேறுபாடும் உடையனவாய்க் 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்' பொடு காட்சியளிப்பவை யெல்லாம் இயற்கையெனப்படும். காலைக் கதிரவனும், மாலைத்தண்மதியும், குளிர்ந்தகாவும், அடர்ந்த சோலையும், மலையும் சுனையும், மலை நீர்வீழ்ச்சியும், நதியும் ஓடையும், நறுநீர் வாவியும், பொய்கையும் சென்றலும் விண்மீன் கணங்களும், பச்சிளங் குழவியும், அதன் கொச்சை மழலையும் இயற்கையின் எழிலை எடுத்துக் காட்டுவன.

### இயற்கை வனப்பு அநுபவம்

இயற்கையின் எழிலை ஆழ்ந்தனுபவித்த அறிஞர்கள் தத்தம் ஆற்றலுக்கேற்றவாறு கவிதைகளாகவும், சித்திரங்களாகவும், சிற்பங்களாகவும் செய்து மகிழ்வர். வேறு சிலர் அவ்வியற்கைப் பொருள்களின் நட்பதிட்பங்களையும் தட்ப வெப்பங்களையும் ஆராய்ச்சி செய்ய விழைகின்றனர். உதாரணமாக, சூரியோதயத்தைப் பலருங் காண்கின்றனர் என்றாலும் அவ்வொரே காட்சி, ஒவ்வொருவரது கருத்திலும் அவரவர் மனப்பான்மைக்கேற்றவாறு தோற்றமளிக்கிறது. கவிஞன் கருத்துக்கு இருளைப் போக்கி ஒளியைத் தரும் ஞாயிறு, பலவித உவமைகளை நினையூட்டலாம். அதே காட்சி, கலைஞனது உள்ளத்தைத் தன்னுடைய பல வர்ண அமைப்பாலும், வர்ண வேறுபாடு மாறுபாடுகளாலும் கவரும். விஞ்ஞானியின் கருத்தோ, காலையில் கண்கொண்டு காணும் கதிரவன் நடுப்பகலில் கண்ணால் காண முடியா நிலைக்குக் காரணமான தட்ப வெப்பங்களை ஆராய்ச்சி செய்ய முனைக்கிறது. இதே கதிரோன் வரவைக் கண்ணுறும் சமயஞானி ஒருவனுக்கு அது உலக அஞ்ஞானத்தைப் போக்க எழும் ஞான சூரியனைக் காட்சியளிக்கும். நீலக்கடலில் உதித்தெழும் செங்கதிரவன் நக்கீரனார்க்கு நீலமயில் மீது தோன்றும் செவ்வேளெனவே தோற்றமளிக்கவும்,

> "உலகம் உவப்ப
> வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறுகடற்
> கண்டா அங்கு
> ஓவற இமைக்கும்
> சேண் விளங்கவிரொளி".

எனத் திருமுருகாற்றுப் படையைத் தொடங்குகின்றார். இதே போன்று, நில நீர் நெருப்பு ஆகாயம் சாற்று முதலிய அனைத்திலும் இறைவனைக் கண்டனர் நம்மூந் தமிழர் அவர் கண்ட இயற்கைக் காட்சிகளிலேயே இறைவனை உணர்ந்து இன்புறுகின்றனர்.

### இயற்கையில் இறைவன்

இறை என்ற சொல்லுக்கு எங்கும் விரவித்தங்கும் பொருள் என இலக்கணங் கண்டார் அருத்தம் கூறுவர் பொதுவாக எங்கும் விரவி நிற்கும் பொருளைச் சிறப்பாக இயற்கையிலேயே கண்டனர். ஆசிரியர் நக்கீரனார் இயற்கையில் இறைவனது மணம் கமழ் தெய்வத் திருநலம் காண்கின்றார்; இயற்கையின எழிலையே தெய்வமாக உருவகப்படுத்துகின்றார்; இயற்கையை உடலாகவும் அதிலுறையும் இறையை உயிராகவும் காண்கின்றார்; இயற்கை எழிலுக்கு முருகன் என்ற பெயர்சூட்டுகிறார்.

### இயற்கையின் எழில்

இயற்கையையே இறையாய் வழிபட்ட பழந்தமிழர் பூசைக்குரிய இடங்களாகக் கொண்டவை, குளக்கரையும், மரத்தடியும், பூங்காவும், ஆற்றோரமும், ஆற்றிடைத்திட்டும், அருவிநீர்த் துறைகளும், குன்றமும் குகைகளுமாகும். இத் தெய்வச் சின்னங்களே பின்னர்க் கோயில் கொண்டன. அம் மரங்களே தல விருக்ஷங்கள் எனப்படுகின்றன. இவ்வுண்மையை நக்கீரனார் தமது திருமுருகாற்றுப் படையிலே இறைவனது உறைவிடங்களை எடுத்துக் கூறும் பகுதியி லிருந்தும் அறிகின்றோம். அப்பகுதி,

> "சடுங்காவும் கவின்பெற
> தருத்தியும்,
> ஆறுங் குளனும் வேறுபல்
> வைப்பும்,
> சதுக்கமும், சந்தியும்,
> புதுப்பூங்கடம்பும்,
> மன்றமும், பொதியினும்,
> சந்துடை நிலையினும்,
> ஆண்டாண்டுறைதலும்,
> அறிந்தவாறே
> ஆண்டாண்டாயினும்,
> ஆகக்காண்தக"

என வருவது, இது நக்கீரனார் அறிந்த துறை. நக்கீரர்க்குப்பின் தோன்றிய சமயப் பெரியார்களும் ஆலயத் தெய்வங்களை வழிபட்டபோதும் சுற்றியுள்ள அத் தெய்வங்களின் உறைவிடங்களான இயற்கையை மறந்தாரில்லை. தேவார திருவாசகங்களுள்ளே இயற்கை வருணனைகளைப் பரக்கக் காணலாம், சிறப்பாக ஞானசம்பந்தரது பாடல்களுள் எங்கும் இயற்கையன்னையின் எழிலையே காண்கின்றோம். இயற்கை வனப்பு மிக வாய்ந்த திருக்குற்றாலத் துறையும் இறைவனைப் பாடுங்கால், அவர்

> "பக்கம் வாழைப் பாய்கனியொடு
> பலவின் தேன்
> கொக்கின் கோட்டுப் பைங்கனி
> தூங்கும் குற்றாலம்"
> "மலையார் சாரல் மகவுடன்
> வந்த மடமந்தி
> குலையார் வாழைத் தீங்கனி
> மாந்துங் குற்றாலம்".

என்று பலவாறு இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வதைக் காண்கின்றோம். (வளரும்)

# சமூக ஒற்றுமை

## அதுவே நாட்டுக்கு நன்மைதரும்

சுதுமலை வாய்க்காலைச் சென்ற வாரம் வெட்டிக் கருமாரம்பம் செய்துவைத்த போக்குவரத்து மந்திரி மிஸ்ரர் ஜே. எல். கொத்தலாவலை, இந்த இலங்கையிலே சகல சமூகங்களையும் ஒற்றுமையாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர். அவர் கூறியதாவது:

"தமிழராகிய நீங்கள், இலங்கை மாதாவின் புத்திரர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இலங்கையர் என்று பெருமிதமடைய வேண்டும்.

"பிரிட்டிஷ் சாதியார் என்று நாம் கூறுகின்றோம். ஸ்காத்லாந்து, வேல்ஸ், இங்கிலாந்து என்னும் மூந்நாட்டிலும் வதியும் மூப்பாலான வகுப்பு மக்கள் ஒன்று சேர்ந்தே பிரிட்டிஷார் எனப்படுவார். அவர்கள் ஒற்றுமை யடைந்து முன்னேறி வருவதை நாம் அவதானித்தல்வேண்டும். அதுபோல இந்த இலங்கையில் வாழும் தமிழர், சிங்களர், இஸ்லாமியர் என்னும் வகுப்பினரும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டை முன்னேற்றமடையச் செய்யவேண்டும்."

# தொழிலாளர்க்கு

## சேமநிதி வசதி

இலங்கையில் லட்சக்கணக்கான தொழிலாளர் இருக்கிறார்கள். இவர்கள் அன்றடித்து அன்று வாயிற் போடும் நிலைமையில் உளர். இவர்கள் வயோதிபம் அடையும் காலத்தில் அல்லது வேலை செய்ய முடியாத காலத்தில் அவர்கள் கதி என்ன?

குறிக்கப்பட்ட ஓர் வயது அடைந்ததும், எல்லாத் தொழிலாளிகளுக்கும் பென்ஷன் எனப்படும் உபகார வேதனம் உதவப்பட வேண்டும் என்ற ஆலோசனை இப்போது இருந்துவருகிறது. ஆனல் இந்த ஆலோசனை எப்போது கிரியாம்சத்தில் உருவாகும் என்பதை இப்போது சொல்லமுடியாது.

ஆனல், சமூகசேவா விசாரணைச் சங்கம், இப்போது ஓர் ஆலோசனையை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருக்கிறது. இலங்கையில் உள்ள மக்களின் வாழ்க்கைநிலையை சமூகநிலையை உயர்த்த என்னவிதமான நடைவடிக்கைகளைக் கையாளவேண்டும் என்பதனை விசாரித்து அறிக்கை விடுவதற்காகவே இச்சபை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. இச்சபையில் டக்ரர் ஐவர் ஜென்னிங்ஸ், மிஸ்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஜின்னு மறுத்தால்?

## இனி நடப்பது என்ன?

முஸ்லிம்லீக் இந்திய அரசியல் நிர்மாணசபையைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்தமை காங்கிரஸ் வாதிகளுக்கு ஏமாற்றத்தையோ மனவருத்தத்தையோ கொடுக்கவில்லை. "இத்தீர்மானத்தை ஓரளவு நாங்கள் எதிர்பார்த்துத்தான் இருந்தோம்" என்று ஓர் பிரபல காங்கிரஸ் தலைவர் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர். அப்படியானல் இனி நடப்பது என்ன?

அரசியல்நிர்மாணவேலையில் ஆரம்பத்தில் சில பகுதிகள் சேரவிட்டாற் பாதகமில்லை. கனடா, அமெரிக்கா, முதலாம் நாடுகளின் சுதந்திர அரசியல் நிர்மாணிக்கப்படும்போது, அந் நாடுகளின் சில பகுதிகள் ஆரம்பத்திற் சேரவில்லை. ஆனல் அவை அரசியல் நிர்மாணிக்கப்பட்டபின் சேர்ந்தன. அதேபோல இந்தியாவிலும், சில மாகாணங்கள்-வங்காளம், சிந்து முதலியன இப்போது சேராவிட்டாற் பாதகமில்லை. அரசியல் நிர்மாணவேலை முடிந்தபின், அவை சேரக்கூடும், ஆகவே, அவைஇப்போது சேராதிருப்பதற்காக அரசியல் நிர்மாணசபை தனது வேலையைக் கைவிடமுடியாது.

இந்தியாவின் சமஸ்தானதிபதிகள் சிலர்க்குப் பண்டிதர் நேரு அரசியல் நிர்மாணசபையில் நிறைவேற்றிய குடியரசுத் தீர்மானம் வெறுப்பைக் கொடுத்திருக்கிறது. அவர்கள் சென்றவாரம் கூடிச் செய்த தீர்மானமும், மிஸ்ரர் ஜின்னவுக்கு ஓரளவு பலத்தைக் கொடுத்திருக்கிறது எனலாம்.

ஆனல் இந்தியாவின் சமஸ்தானதிபதிகள் அனைவரும் இந்திய சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடுவர் என எதிர்பார்க்கவொண்ணது. சென்ற 31-1 47-ல் பண்டிதர் நேருவும் அவர் சகாக்களும் புதுடெல்கியில் பல பிரதான சமஸ்தானதிபதிகளைச் சந்தித்து, இப்போதுள்ள அரசியல் நிலைமை சம்பந்தமாகச் சம்பாஷித்தனர் என்று தெரிகிறது. இதன் பயனுக, அவர்களில் அனேகர் அரசியல் நிர்மாண சபையில் சேர்ந்து ஒத்துழைக்க முன்வருவர் என்று தெரிகிறது.

ஏற்கெனவே பரோடாச் சமஸ்தானம், அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்து சுதந்திரவிஷயத்தில் உழைக்கத் தீர்மானித்திருக்கிறது. ஜின்னு சரி, சேர்ச்சில் முதலிய ஏகாதிபத்திய வாதிகள் சரி எத்தகைய முட்டுக்கட்டை யிட்டாலும், இந்திய சுதந்திர விஷயத்தில் பரோடா கட்டாயம் பங்குபற்றி தேச முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் என்று அச் சமஸ்தானத்துப் பிரமுகர் ஒருவர் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினர்.

### ருஷியப் பாஷையில் மகாபாரதம்

மகாபாரதத்தை ருஷியப்பாஷையில் மொழிபெயர்க்க ருஷியா இப்போது முயற்சி செய்கிறது. இதனை மொஸ்கோ ரேடியோ மூலம் அறிவித்த விமரிசகர், மகாபாரதம் "உலகிற் சிறந்த காவியம்" என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞ
தை மீ உடு உ வெள்ளிக்கிழமை


## இலங்கை அரசினர் புகைரதம்.

II

கிரயம் அதிகப்பட்டமையினால் இனி, இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளுள் ஒருபகுதியார், இதுகாறுஞ் செய்துவரும் பிரகாரம் இரண்டாம் வகுப்பிற் பிரயாணஞ் செய்வதை யொழித்து, பிரயாணச் செலவுச் சுருக்கத்தை யுத்தேசித்து மூன்றாம்வகுப்பிலேயே வந்து செறிவர்; மூன்றாம் வகுப்புக்குக் கீழ் ஒரு வகுப்பில்லை யாதலினால், அற்ப விகிதம் கூடிய பிரயாணச் செலவு கொடுக்கும் மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளே இப்பொழுது படுங் கஷ்டத்தைக் காட்டிலும் இன்னும் அதிகமான கஷ்டத்தைப் பின்னர்ப் படவேண்டி நேருமென்பது நிசம். மேலும் புகைரதப் பகுதி "ட்ரொலி" யென்று சொல்லப்படும் புகைரத "பஸ்கள்" குறித்த குறித்த தானங்களுக்கிடையே, விதித்த விதித்த நேரங்களில் ஓடித்திரிந்தமையினால்,சந்தைகட்கும் கடைகளுக்கும் பள்ளிக்கூடங்கட்கும் கோடு கச்சேரிகளுக்கும் இதர பிற இடங்கட்கும் போகவேண்டிய பிரயாணிகள் சௌகரியமாகப் போய் வருதல் இயலுமாகவிருந்தது;அப்புகைவண்டிப்பஸ்களின் பிரயாணம் யுத்தகாலத்தோடு நின்றுவிட்டது; ஆனால் இற்றைவரையில் அவை பழையபடி ஓடத் தொடங்கில; இதனாற் பிரயாணிகட்குப் பெருங் கஷ்டமேற்பட்டிருப்பதோடு, புகைவண்டிகளில் ஏறிப் பிரயாணஞ் செய்யும் மக்களின் தொகையும் மிக அதிகப்படலாயிற்று. இனி மோட்டர்வண்டி, பஸ் முதலிய இவைகளில் ஒரு குறித்த தொகைக்கு மேற்பட்டவர்களை யேற்றிக் கொண்டுபோக வொண்ணாதென்ற பிரமாணமுண்டு; ஆனால் இந்தப் பிரமாணம் எங்கள் அரசினர் புகைரதத்திற்கு இல்லையாகும்; சடப் பொருள்களை ஏற்றிச் செறிப்பதுபோல, உயிருள்ளவர்களென மதிக்கப்படும் பிரயாணிகளை, புகைவண்டிப் பெட்டிகளில் இடமில்லா தொழிந்த போதும், புகைரதஸ்தானங்களிலுள்ள கீழதிகாரிகள் ஏற்றிச் செறிப்பதைப் பிரயாணிகள்ஒவ்வொரு பிரதான புகைரதஸ்தானங்களிலும் அவதானிக்கலாம்.

இவற்றை யெல்லாம் உத்தேசிக்கும்போது, எங்கள் இலங்கையரசினர் வைத்து நடத்தும் புகைரதப் பாதைப் பிரயாணம், நரகலோகத்திற்குப் போகும் பிரயாணம்போலாமென ஒப்பிடலாம்; இப்படியான சீர்கெட்ட, பிரயாணத்திற்கேற்ற சௌகரியங்களில்லாத, புகைரதப்பகுதிக்கு, பல்லாயிரக் கணக்கான வேதனம் பெறும் ஒரு போக்கு வரத்துப்பகுதி மந்திரி, அவருக்கொரு காரியநிர்வாகசபை, அகிலஇலங்கைப் புகைரதப்பகுதித் தலைவர், அவருக்காகிய பரிவார உத்தியோகத்தர்கள், புகைரதப் பகுதிப் பரிசோதகர்கள், இன்னும் புகைரதஸ்தானத் தலைவர் தொடக்கம்'போட்டர்' வரையிலுள்ள உத்தியோகத்தர்களை யெல்லாங் கணக்குப் பார்த்தால் இலட்சத்திற்கு மேற்படுமல்லவா? இனி போக்கு வரத்துப்பகுதி மந்திரியார் தொடக்கம் போட்டர்வரையில் உதவப்படும் மாச வேதனம் பலகோடி பெறுமல்லவா? இவற்றையெல்லாம் உத்தேசிக்குங்கால், இலங்கைப் புகைரதம் ஓடுவது ஊரவர்களின் நன்மையை உத்தேசித்தல்ல வென்பதும், போக்கு வரத்துப்பகுதி மந்திரி முதலாம் உத்தியோகத்தர்களுக்கு நல்ல வேதனந் தேடிக் கொடுப்பதற்கே இந்தப் புகைரதம் ஓடுகிறதென்பதும், புகைரதங்களுக்கு வருவாயுண்டாக்குவதற்கே பிரயாணிகள் ஏறிப் பிரயாணஞ் செய்யவேண்டியிருக்கிற தென்பதும் புலப்படுமல்லவா? ஏன்? புகைரதப் பகுதி யுத்தியோகத்தரின் வேதனம் குறையக்கூடாதென்ற கொள்கையை அரசினர் விடுத்து, அவர்களுடைய வேதனத்திலே ஒரு விகிதத்தைக் குறைத்துக்கொண்டு, பிரயாணிகளிடத்தில் அறவிடப்படும் பிரயாணக் கிரயத்தை இப்பொழுது விதிக்கப் பட்டுள்ள நிலைமையிலேனும்விட வொண்ணாதா? அல்லாமலும், யுத்த காலத்திற்கு முன்னர்ப் புகைரதம் ஓடிய முறைகளையெல்லாம் பழையபடி ஒழுங்குபடுத்திவிட்டு, அப்படிச் செய்த பின்னரும் புகைரத வருவாய் செலவைக் காட்டிலும் குறைவென்றதைக் கண்டபின்னரல்லவா புகைரதப் பிரயாணச் செலவை அதிகாரிகள் உயர்த்த உத்தேசிக்கவேண்டும்? மேலும் கல்விப் பகுதி மந்திரி இலங்கை முழுவதும் ஆரம்ப வகுப்பு முதல் உயர்தர வகுப்புக்கள் ஈறாக எல்லா வகுப்பிலும் எப்பாஷையைப் படிக்கும் பிள்ளைகட்கும் இலவசக்கல்வியூட்டத்தொடங்கியிருக்கிறார்; அப்படி யிருக்க, இந்தப் போக்கு வரத்துப்பகுதி மந்திரியார் தம்பரிபாலனத்திலேயுள்ள புகைரதப்பகுதியிற் செய்யத்தக்க சௌகரியங்களை யெல்லாஞ் செய்து. இன்னும் பெருந்தொகையானோரைப் புகைரத மார்க்கமாகவே பிரயாணம்பண்ணத் தூண்டி, வருவாயை அதிகப்படுத்திப் பிரயாணக் கிரயத்தைக் குறைத்தேனும், இல்லையேல் இப்போது உள்ளபடியேனும் விதித்துவிட முடியாதா? புதிய பாராளுமன்றத்திற்குப் புகைரதப் பகுதியால் நஷ்டங் காட்டவா இந்த மந்திரியார் உத்தேசித்திருக்கின்றார்?

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—4)

"மறக்க முடியுமோ"

"அவர் என்மீது தாம்கொண்ட அன்பைக் கண்களால் உருப் பார்போற் கருணையுடன் என்னைப் பார்த்தார்; பார்த்த மாத்திரத்தே என் கண்களினின்றும் நீர்த்துளி முத்து முத்தாகச் சிந்தியது; அப்பொழுது அவர் தாமும் சஞ்சலப்பட்டாராய்த் தம்முகத்தைத் திருப்பிக்கொண்டு, 'பயணம் அனுப்பும்போது ஏன் கலங்குவான், சிந்தாயாத்திரையாய்ச் சென்று வர வேண்டுமென மகிழ்ச்சியோடு விடைதந்தல்லவோ என்னைப் பயணம் அனுப்பி வைக்கவேண்டும்" என்றார், அக்கா, இந்த அமிர்தமொழிகளைக் கேட்டவுடனே, அன்பிற் குமுண்டோ அடைக்குந்தாள் ...." என்றபடி நான் கன்னிகை யென்பதையும் மறந்தேன். சரேலென ஓடிப் போய் அவருடைய பாதங்களிற் பஞ்சாங்கமாக விழ்ந்து பணிந்தேன்; சுகமே போய்வாருங்கள், என்னை மறந்துவிடாதீர்கள் என்றேன்; மறக்க முடியுமோ என்றார் அவர்; எழுந்து ஒதுங்கி விநயமாக நின்று தாயாரைப் பார்த்தேன்; தாயார் பிரமித்து நிற்கக் கண்டேன்; எங்களிடம் அநுமதி பெற்றுக்கொண்டு மீண்டார்; அவர் போய் மறையுமட்டும் தலைவாசலில் அவரைப் பார்த்தபடி நின்றேன்; அவர் போகும் போது என் அன்பைத் தாம் பிடுங்கிக்கொண்டு, தம்முடைய அன்பில் ஒருபாகத்தை என்னிடம் விட்டுப் போய்விட்டார்; அப்படிப் பட்டவரைநான் மறக்க முடியுமோ? அவருக்கு ஏதும் ஆபத்து வருமென என்னால் நினைக்க முடியுமோ" என்றுஉள்ளமுருகக் கூறினள் சிவபாக்கியம் இவற்றையெல்லாஞ் சொல்லக்கேட்டுக் கொண்டிருந்த புவனேசுவரி தானும் மனமுருகியவளாய் எவ்வகையான சமாதானமுஞ் சொல்ல வகை யறியாளாய் மௌனத்தோடிருந்தாள்; பின்னர் அவள் சிவபாக்கியத்தை அன்புடன் நோக்கி "தங்காய், நீர் சொல்வது அத்தனையும் நிசம், ஆனால், அவருக்கு ஏதும் இடையூறு நேராதபட்சத்தில், இற்றைவரையில் உமக்காயினும் தம்முடைய சுகத்தைத் தெரிவிக்கும்படி ஒரு கடிதம் எழுதியிருக்கமாட்டாரா? அவர் பகைவர் கையிற் சிறைப்பட்டாலும் இப்பொழுது மீட்சியடைந்திருப்பாரே? தேகத்திற்கு ஏதும் ஊறு கண்டிருப்பின் இதுவரையிற் சிகிச்சை பெற்றுச் சுகமாகி மீண்டிருப்பாரே? அவரைப்பற்றி இன்றுவரையில் ஒன்றும் கேள்விப்படாமையினாலல்லவோ இங்குள்ளார் எல்லாருஞ் சஞ்சலப் படவேண்டியிருக்கிறது; அவர் ஊருக்கு ஒரு கடிதம் இதுவரையில் எழுதாவிட்டாலும், அவரைப்பற்றிய செய்தி ஏதுங் கிடைத்தால் உமது அண்ணர் உடனே கடிதமெழுதி உங்களுக்குத் தெரிவித்திருப்பாரே; எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே" என்று கவலையுடன் சொன்னாள்; "ஆம், அக்கா, நீங்கள் சொல்வது நியாயம்; ஆனால் அவர் இன்னமும் இருக்கிறாரென்றேஎன்மனம்திடமாக நினைக்கின்றது;என்குறையையுலகமாதாவாகிய ஈசுவரியிடம் முறையிட்டு வருகிறேன்; அந்த ஈசுவரி என்னைக் கைவிட்ட அன்றுதான் நான் என் நம்பிக்கையைக் கைவிட்டு என் உயிரையும் விடுவேன்; சாவித்திரிக்கு, இறந்த அவள் கணவனை மீட்டுக் கொடுத்த உலகமாதா, சகல உலகங்களிலுமுள்ள ஆன்மகோடிகளையெல்லாம் பாதுகாத்தருளும் அகிலாண்டநாயகி, அவளுடைய அநந்த கோடிக் கணக்கான சிறுமிகளுள் ஒருத்தியான என்னை மாத்திரம் புறக்கணிக்கப்போகின்றாளா? அவள் புறக்கணிக்கத் தலைப்பட்டால் எனக்குப் புகலிடம் பிறிதுமுண்டோ! அக்கா அந்த ஆத்தாளை நம்பினவருக்கு அல்லல் ஒருபோதுமில்லை: இதுவே என் திடசித்தம்" என்று சிவபாக்கியம் உறுதி

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# இந்திய அரசியல்

### அடுத்த நடைவடிக்கை

முஸ்லிம்லீக் அரசியல் நிர்மாணசபையிற் பங்குபற்ற மறுத்துவிட்டபடியால், அதன் பிரதிநிதிகள் இடைக்கால அரசாங்கத்தில் பதவி வகிக்க உரிமையுடையவர்களா என்ற ஓர்பிரச்சினை இப்போது எழுந்திருக்கிறது. இவ்விஷயமாகக் காங்கிரஸ் அதிகாரபீடம் இனிச் சும்மாவிருக்கவொண்ணாது என்றும், இவ்விஷயம் இராசப்பிரதிநிதிக்கும் அவர் மூலமாக பிரிட்டிஷ் மந்திரசபையினர்க்கும் அறிவிக்கப்படும் என்றும்தெரிகிறது காங்கிரஸ் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையை இப்போது பூரணமாகஒப்புக்கொண்டபோதிலும்முஸ்லிம்லீக் விடாகண்டத்தனமாக இன்றையநிர்மாணசபையைப் பகிஷ்கரிக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இவ்விஷயம் சமர்ப்பிக்கப்பட்டதும் அதன் உண்மை மனநிலை வெளியாகும். காங்கிரசின் பிந்திய தீர்மானம் சரியெனக் கண்டால் பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லிம்லீக்கை இடைக்கால அரசாங்கத்திலிருந்து வெளியேறச் சொல்லவும்கூடும்.

O

### லீக்நர் கட்டாயம் சேருவர்

காங்கிரஸ் காரியநிருவாகசபையில் அங்கத்தவராயுள்ளவரும் பிரபல சீக்கியத்தலைவருமான சர்தார் பிரதாபசிங், முஸ்லிம்லீக் இன்னும் பல சலாக்கியங்களைப்பெறுதற்காகவே இப்படி விடாகண்டத்தனமாக நிற்கிறது. ஆகவே அது தன் புஜ்டாக்கள் இனி அதிகம் பலிக்காது என்று கண்டவுடன் தானாக வந்து அரசியல் நிர்மாணசபையிற் சேர்ந்துகொள்ளும்என்று ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினார்.

O

### லீகரல்லா முஸ்லீம்கள் கட்சி

முஸ்லிம்லீக்கின் கொள்கையுடன் ஒத்துப்போகாத முஸ்லிம்களின் கூட்டம் ஒன்று சென்ற முதலாம் திகதி மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் தலைமையில் கூடியது. அக்கூட்டத்தில்முஸ்லிம்லீக்கை சேராத முஸ்லிம்களின் எதிர்கால நடைவடிக்கை திட்டமாகத் தீர்க்கப்படவில்லை. ஆனால் இவ்விஷயமாக நிர்ணயிக்க அடுத்த மாதம் ஓர் மகாநாடு கூடும் என அறியக்கிடக்கிறது.

O

### வங்காளப் பிரிவினை

வங்காளத்தில் இன்று முஸலிம்லீக் அரசாங்கம் பரிபாலிக்கிறது. அந்த அரசாங்கமும், லீக்கரும் அரசியல் நிர்மாணசபையைப் பகிஷ்கரித்துவிட்டனர் இதனால் அங்கே வசிக்கும் ஹிந்துக்களின் கதியென்ன? அங்கே 100 க்கு 40 விகிதத்துக்குமேல் ஹிந்துக்கள் இருக்கிறார்கள். வங்காள மாகாணத்தை இரு துண்டாக்கி ஓர்பங்கில் முஸல்மான்கள் பெரும்பான்மையாகவும், மற்றப்பங்கில் ஹிந்துக்கள் பெரும்பான்மையினராகவும் இருக்கலாம். இந்தப் பிரச்சினையை அகிலஇந்தியஹிந்து மகாசபை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது இதற்கென ஓர் விசாரணைச் சபையையும் ஹிந்து மகாசபை நியமித்திருக்கிறது இச்சபை தனது முடிவான அறிக்கையை மார்ச்மாதம் 31-ந் திகதிக்குமுன் சமர்ப்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் ஆற்றிய பணி

## உலோகாயுதத்தை வெட்டிய வீரன்

### பொன்விழாக் கூட்டத்தில் பேருரை

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் பாரதநாட்டின் தவப்புதல்வர், அகில உலகெங்கும் ஹிந்து தர்மத்தின் கொடியை ஆரோகணித்து, அத் தர்மத்தின் தைவிகத்தை புதிதத்தை அகில மக்களுக்குஞ் சிங்கநாதம் செய்த சிங்கேறு, அடிமைகளாய்க், கோழைகளாய்க் கிடந்த ஹிந்து மக்களை, பாரத மக்களைத் தட்டி எழுப்பி, "எழும்மின் விழிமின்! கருதிய கருமம் கைகூடும்வரை சலியாதுழைமின்" என்று ஜெயபேரிகை கொட்டிய செம்மல், இன்றும் என்றும் ஹிந்து சமூகம் உள்ளளவும் ஹிந்து மக்களின் ஹிருதயக் கோவிலில் வீற்றிருந்தருளும் வேதாந்த கேசரி, எங்கள் விவேகானந்தப் பெருந்தகை இந்த இலங்கைக்கு விஜயஞ் செய்து, இதனைப் புண்ணிய பூமியாக்கினர். அதன் ஞாபகார்த்தமாக இன்று இலங்கை எங்கணும் இராமக்கிருஷ்ண-விவேகானந்தப் பொன்விழா மங்கலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா சென்ற திங்கட்கிழமை கொழும்பு விவேகானந்த சபையில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்துக்கு, காராச்சி இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்களும் விஜயஞ் செய்திருந்தார்.

இப் பொன்விழாவை ஒட்டி அன்று பின்னேரம் ஓர் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. ஸ்தல ஸ்தாபன மந்திரி மிஸ்டர் பண்டாரநாயக்கா அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமைப் பிரசாரணத்தில், உலோகாயுதக் கொள்கைகள் சமயாநுட்டானங்களையும், சமயக் கோட்பாடுகளையும் நசுக்க முயற்சிக்கும் இக்காலத்தில் இராமக்கிருஷ்ணர் - விவேகானந்தர் என்னும் இரு நாமங்களும் மக்களுக்கு வழிகாட்டும் தீபஸ்தம்பங்கள்போல மிளிர்கின்றன என்று குறிப்பிட்டார்.

ஸ்வாமி ரங்கநாதானந்தா அவர்கள் தமது பிரசாரணத்தில் பின்வருமாறு பேசினர்:-

#### ஆத்மீக உணர்ச்சி வேண்டும்

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தா விஜயஞ் செய்த இப் புண்ணிய நாட்டிற்கு, நான் வரும் சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சி யடைகிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு மதமே பிரதானமானது. அதுவே நாட்டின் உயிர்நாடி. மதத்தோடு கலந்த சமூக அரசியல் காரியங்களே உருப்படியான பலனளிக்கும். ஆத்மீக உணர்ச்சியில்லா நாடு ஒருபோதும் கடைத்தேறமாட்டாது. சுவாமி விவேகானந்தர் அன்று கூறிய இவ்வுண்மையை நாம் இப்பொழுதும் பிரத்தியக்ஷமாகக் காண்கின்றோம். உலோகாய நாகரிகம் தலைக்கேறி நிற்கும் மேல்நாடுகளின் கதி என்னவாயிற்றென்பதை சென்ற யுத்தத்தின் பயனாக நாம் அறிய முடிகிறது. ஆனால் சமயப் பற்றுக்கொண்ட ஆசிய நாடுகள் யுத்தத்தின் தீமைகளிலிருந்து தப்பிவிட்டன.

#### உண்மையான சமயவாதி

உலோகாயத நாகரீக வாதிகள் மகத்தான சுயநலக்காரர்களாவார்கள். ஏனெனில் அவர்கள் வாழ்க்கையைச் 'சுலபமாக' நடத்துவதற்கான வசதிகளைச் செய்துகொண்டு இன்பமாகக் காலத்தைக் கடத்திச் செல்லுகின்றார்கள். பிறர் நலத்திற்கோ அல்லது உலக சுபீட்சத்திற்கோ கஷ்டப்பட்டு உழைக்க அவர்கள் விரும்புவதில்லை. உழைக்கவும் முடிவதில்லை. அதனாலேயே அவர்கள் மதசம்பிரதாயங்களை எதிர்க்கிறார்கள்.

மனித வர்க்கம் கால்வயிறு கஞ்சி கூடக் கிடைக்காமல் கஷ்டப்படும் பொழுது, "மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைவதற்கு நூற்றுக் கணக்கான கோயில்களுக்குச் சென்று பல கடவுள்களைத் தரிசியுங்கள்" என்று போதிக்கும் சமயவாதத் தன்மை கூடாது. மக்களின் ஜீவாதாரமான தேவைகளைப் பூர்த்திசெய்ய உழைப்பவனே உண்மையான சமய வாதியாவான். இக்கொள்கை சரித்திரப் பிரசித்தமானது. முதன் முதலாக இதை வெளியிட்ட பெருமை சுவாமி விவேகானந்தருக்கே உரியதாகும்.

#### உலோகாயுதம் - சோம்பற்கொள்கை

சமயவாதியின் மனம் அவர் போதிக்கும் கொள்கைகளுக் கேற்பப் பண்பு பெற்றிருக்க வேண்டும். எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாது கொள்கையைக் கிரியாம்சையில் காட்டவேண்டும். உலோகாயுத நாகரீக வாதிகளுக்கு தங்கள் மனத்தைக் கட்டுப்படுத்தவோ அல்லது ஒழுக்க நெறியில் பண்புபெறச் செய்யவோ முடிவதில்லை. அவர்களின் சுகமான - சோம்பேறிக் கொள்கைக்கு இதுவும் ஓர் காரணமாகும்.

#### விவேகானந்தர் உபதேசம்

அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு நாடு போதிக்கும் ஆத்மத்துறை இலகுவில் உலக மக்களின் கவனத்தில் உறைப்பதில்லை. மக்களின் நலத்திற்காக தங்களின் ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் செலவிட்ட விவேகானந்தரைப் போன்ற சமயவாதிகள் தோன்றியதன் பயனாக இந்தியா, இலங்கை, பர்மா முதலிய ஆசிய நாடுகள் ஆத்மீகத் துறையில் பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கின்றன. விரைவில் தங்கள் லக்ஷியங்களை அடைந்து வருகின்றன. உலகத்திலே தலைசிறந்த நாடுகளாக விளங்குகின்றன. நாம் ராமகிருஷ்ண விவேகானந்த சுவாமிகளின் வழியைப் பின்பற்றி, கொள்கைகளைப் பரப்பி சகல துறைகளிலும் சிறந்ததான ஆத்மீகத்துறையைத் தழைத்தோங்கச் செய்யவேண்டும். வேற்றுமைகள் உள்ள இடத்தில் ஒற்றுமையைச் ஆக்குவதும் வெறுப்புக்குப் பதில் விருப்பைத் தோற்றுவிப்பதுமே விவேகானந்தரின் உபதேசங்கள். ஐக்கிய பாவத்தைத் தோற்றுவிக்கும் சக்தி மதத்திற்கு மட்டுமே உண்டென்பதை நிலைநிறுத்திய ஸ்வாமிஜியின் உபதேசங்கள் மனித வர்க்கத்துக்கு மகத்தான நன்மைகளைச் செய்யும்.

ஸ்ரீ ஜூத்ஸம் எஸ் ஆனே பேசுகை குறிப்பிட்டதாவது:—

ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்காவில் விஜயம் செய்துவிட்டு இலங்கை வழியாக இந்தியாவுக்குத் திரும்பியபோது கிழக்குக்கும் மேற்குக்குமிடையில் ஒரு புதிய தொடர்ப அமைக்கப்பட்டது. ஸ்வாமி விவேகானந்தரும் அவரைப்போன்ற பல பெரியார்களும் ஆற்றிய ஆத்மீகப் பணியை ஆராய்ந்தால் இன்று ஆசியா நாடுகளிலே ஏற்பட்டு வரும் மகத்தான புரட்சியின் உண்மைத்தன்மையையும் சகோதர வளர்ச்சியின் ஆத்மீக அடிப்படையையும் நாம் நன்கு உணரமுடியும்.

# சமரசம்

## இதுவே ஹிந்து மார்க்கம்

கொழும்பு விவேகானந்தசபை ஆதரவில் விவேகானந்தசபை மண்டபத்தில் ஸ்ரீமத் விவேகானந்தசுவாமிகள் திருநாள் நியாயவாதி திரு. என். நடராஜா தலைமையில் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. தலைவர் பேசுகையில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் இலங்கை விஜயம்பற்றியும் அவரது போதனைகள் நித்திரையில் ஆழ்ந்துகிடந்த இந்து சமூகத்தைத் தட்டியெழுப்பியதென்றும் மனித சமூகத்திற்குச் சேவை செய்வதே பிரதானமானதென்றும் வற்புறுத்திக்கூறினார். தொடர்ந்து பேசுகையில் தற்பொழுதைய விவேகானந்தசபை ஸ்தாபனத்தைத் திருத்தியமைக்கவும், புதிய கட்டிடங்கள் அமைக்கவும் வகுக்கப்பட்ட திட்டங்கள் பற்றியும், நன்கொடையளிக்க முன்வந்தோர் பற்றியும் தெரிவித்தார். ஒற்றுமையாக ஒரே குறிக்கோளை மேற்கொண்டு பேதங்களின்றி வாழவேண்டுமென்றும் சேவைபுரிய வேண்டுமென்றும் கூறினர்.

டாக்டர் டபிள்யூ பாலேந்திரா, ஸ்ரீமத் சிவகிரி அன்பு கருணையானந்தர், டாக்டர் த. நல்லநாதன், செல்வி கே. மதியாபரணம் முதலியோர் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் போதனைகள்பற்றி தெளிவுபட எடுத்துக் கூறினர்கள்.

இவர்களின்பின் காராச்சி இராமகிருஷ்ணமடத் தலைவர் ஸ்ரீமத் ரங்கநாதானந்த சுவாமிகள் பேசுகையில் விவேகானந்த சுவாமிகளின் போதனைகள்பற்றியும் மனித வாழ்க்கைக்கு சேவையும் அன்பும் முக்கியமென்றும், ஒற்றுமையாக பழங்கால பாகுபாடுகளை ஒதுக்கிச் சமூகத்திலே எல்லோரும் சமம் என்று வாழவேண்டுமென்றும் இம்மாதிரி ஒருசார்பு மக்களை ஒதுக்கிச் சமூகத்திலே ஒழுங்கற்ற முறையில் நடந்ததாலேயே இந்துசமயம் அச

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# 50 ஆண்டுகளுக்கு முன்!

## ஸ்வாமிகளின் யாழ்ப்பாண விஜயம்

### அன்று நிகழ்ந்த இராஜோபசாரம்

இற்றைக்கு 50 ஆண்டுகளுக்குமுன்னர், 1897ம் ஆண்டு ஜனவரிமாதம் 24ம் திகதி ஹிந்துஸ்தானம் ஈன்றெடுத்த சிங்கேறு, விவேகானந்த ஸ்வாமிகள் எமது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அன்று அவர்க்கு அளிக்கப்பட்ட வரவேற்புபசாரம்பற்றி அக்காலத்தில் வெளிவந்துள்ள இந்துசாதனத்து இக்கட்டுரை, இன்று நிகழும் ராமக்கிருஷ்ண-விவேகானந்த இயக்கத்துப் பொன்விழா வைபவத்தை யோட்டிப் பொருத்தமுடைத்தாகும் என்று கருதி ஈண்டு அதனை அநுவதிக்கின்றேம்.

நாம் சென்றபத்திரிகையிற் சொல்லியவாறு எம்மூரரெல்லாம் மிக்க ஆவலோடு வரவெதிர்பார்த்து நின்ற ஸ்ரீமத் விவேகானந்த சுவாமியவர்கள் சென்றமாசம் 24ம் திகதி காலை பத்துமணியளவில் எம்மூரைப் பிணித்து நிற்கும் பாசாந்தகாரத்தையோட்டித் துரத்தவந்த ஞானசூரியனை நிகர்த்து எமது மத்தியில் வந்து சேர்ந்தனர். சுவாமியவர்களது உபசரணைக்காக வரிக்கப்பட்ட நிருவாக சபையார் (ஸ்ரீ அத். நாகலிங்கம், ஸ்ரீ வி. காசிப்பிள்ளை, ஸ்ரீ. அ. மயில்வாகனம் ஆகிய பிரபுக்கள் பலர்) சுவாமிகளை எதிர்கொண்டழைத்து வருமாறு அசுவாதங்களோடும் அன்று சாவகச்சேரிவரையிற் சென்று "கோச்சு" மார்க்கமாக வந்த சுவாமிகளையும் அவரது ஆங்கிலேய அமெரிக்க சிஷ்யர்களில் மூவராகிய கப்டின் செவியர், இவர் பாரியார், மெஸ்குட்வின் என்பவர்களையும், சுவாமியவர்கள் கொழும்பு வந்து இறங்கும்போது வரவேற்குமாறு சென்னையா நகரத்து உபசரணைச் சபையார் அங்கிருந்தும் அனுப்பியிருந்த ஸ்ரீ நிரஞ்சனானந்த சுவாமி யென்பவரையும், தக்க மரியாதையோடும் அகமகிழ்ச்சியோடும் எதிர்கொண்டுபசரித்து அழைத்து வந்தனர். அன்று சாயந்தரம் 6 மணியளவில் எம்மூரார் மிக ஆரவமையோடும் உள்ளன்போடும் செய்த உபசரணையின் காட்சி நாம் முன்னொருபோதுங்கண்டிராத மாட்சியுடைத்தாய், உலகத்தின் கண்ணுள்ள எச்சாதியாரிலும் மார்க்க விசுவாசமும் பக்தியும் மிகவும் பெரிதுடையார் இந்தியர்களே யென்று சுவாமியவர்கள் சொல்லியதற்கு ஓர் சான்றாயுமிருந்தது.

பல்லாயிரவர் புடைசூழ, மேள வாத்திய கோஷங்கள் திசாமுகங்களை அதிரச்செய்ய, தீவர்த்திகளெல்லாம் வானசோதிகளை இரிந்தோடச்செய்ய இரு குதிரைகள் பூட்டிய வண்டிமீதிவர்ந்து இந்துக்கல்லூரியிலியற்றப்பட்டிருந்த அலங்காரப்பந்தர்க்குச் சுவாமியவர்கள் எழுந்தருளியபோது பெரியகடை முதல் கல்லூரி ஈறுகச் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம்ம! எம்மாற் சொல்லத்தக்கதன்று. எங்கணுந் தோரணங்கள்! எங்கணும் பூரணகும்பங்கள்! எங்கணுந் தீபஸ்தம்பங்களுமாயே இருந்தது. எள்ளிடவிடமின்றி எண்ணிறந்தோர் குழுமியிருந்த பந்தர்க்குச் சுவாமியவர்கள் ஏழுமணியென்ன வந்து சேர்ந்து பந்தரின் கீழியற்றப்பட்டிருந்த மிக அலங்காரமான சிம்மாசனத்தின்மீது தமது சிஷ்யர்கள் மூவரும் இருபக்கங்களிலும் எய்தியிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உபசரணைச்சபை லேககராகிய ஸ்ரீ அ. சபாபதிப்பிள்ளையவர்கள் எழுந்து வந்தனோபசாரப் பத்திரிகை யொன்று வாசித்தனர். அவர் வாசித்து முடியவே சுவாமியவர்கள் அப்பத்திரதிற் கூறப்பட்ட விஷயங்களுக்கு உத்தரஞ் சொல்லுமாறு தம்ம சனத்தைவிட்டெழுந்தார். அத்தருணத்தில் அப்பந்தரின் கீழிருந்தோர் யாரும் தம்மை மறந்தனர். எங்கிருக்கின்றேம், என் செய்கின்றேம் என்னும் நினைவுகள் யாவுமிறந்து, புலனைந்தும் தத்தம் பொறிவழி செல்லாது ஒருவழி நிற்கச் சுவாமியவர்களுடைய திருவுருவக்காட்சி மயமாகியே நின்றனர். இப்பெருமானரது திருமேனிப் பொலிவுகண்ட அன்றே நாமெல்லாம் கடைத்தேறினேம், நாம் பூர்வ ஜன்மங்களிற் செய்த புண்ணியங்கள் யாவுக்கும் பலன் அன்றே பலித்ததென்று கூற எந்த நாப்பின்னிடும். கோடிசூரியர் உதயமீதென்ன அட்டலக்குமிகளும் நடனமிடும் திருவ

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் ஆக்ஞை

## அதனை மீற நாம் யார்?

"நான் மனிதர்களிடத்துக் கதற வில்லை. ஆண்டவனிடத்திலே கதறுகிறேன். மக்களைப் பிரலாபிக்கச் செய்வதற்காக நான் இங்கு வரவில்லை" இவ்வுருக்கமான வார்த்தைகள் அமிஷபாராவிலிருந்து ஸதகாரியா செல்லும் வழியில் (கிழக்கு வங்காளத்தில்) கலவரத்தினுல் பாழடைந்த குடிசையினுள் பிரவேசிக்க நேர்ந்தக்கால் காந்திஜியின் வாயினின்றும் வெளிப்பட்டவை.

காந்திஜி பாழடைந்த அக்குடிசையினுள் பிரவேசிக்கிறார், குடிசையிலுள்ள மக்கள் அவரைச் சூழ்ந்து கொள்கிறார்கள். "உங்களுக்குத் தர எங்களிடம் ஒன்றுமில்லையே. எங்களைச் சேர்ந்த 9 பேர்களும் கலவரத்திற்குப் பலியாகிவிட்டார்கள் என அவர்கள் அங்கலாய்க்கின்றனர். அப்பொழுது தான், மகாத்மாவின் வாயினின்றும் அவ்வாறுதல் வார்த்தைகள் வெளிப்பட்டன, மகாத்மா அவர்களுக்கு சொல்கிறார்:

"எல்லாம் ஈசன் செயல் அவன் இட்ட ஆணைப்பிரகாரமே சகலமும் நிகழ்கின்றன. அவன்மீது பழியைப் போட்டு சரணடைவதைத் தவிர மனிதன் வேறு என்ன செய்யமுடியும்? எத்தனையோ பெரிய பெரிய சாம்ராஜ்யங்களெல்லாம் தோன்றி மண்ணோடு மண்ணாகியுள்ளன. நாமறிய ஹிட்லர்கூட உலகைக்கட்டி ஆட்சி செலுத்த எண்ணினான், அவனது கதி என்னவாயிற்று? நாம் நிதர்சனமாக இவற்றைக் காண்கிறோம்.

மனிதர்கள் எங்கும் வழி தவறுவது சகஜமே. அதேபோல் இங்கும் நடந்துவிட்டது. இதற்காக ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே குரோதம் நிலவவேண்டுமா? ஒருபோதும் கூடாது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்கள்.

காந்திஜீயின் வேதாந்தத்துவம் வெளிப்படும் மற்றொரு நிகழ்ச்சி ஒன்றும் நவாப் கிராமில் காந்திஜி தங்கியிருக்குங்கால் நிகழ்ந்தது.

ஒரு வயோதிகர், கலவரத்தில் சகல உடமைகளையும் இழந்தவர். அவர் மகாத்மாவின் கால்களில் தண்டனிட்டு சகலவற்றையும் இழந்துவிட்டேனேயெனக் கூறி முறையிடுகிறார். அப்பொழுது மகாத்மா அவருக்கு ஆறுதல்சொல்லுகிறார். வாழ்க்கைச் சக்கரம் அவ்வளவுதான். உடமை யாவற்றையும் இழந்தாலும் இதற்காகச் சஞ்சலப்படக்கூடாது என்ற வார்த்தைகள் மகாத்மாவின் வாயினின்றும் வெளிப்பட்டன. இந்த சஞ்சலமிக்க வயோதிகர் குடிசையிலேயே மகாத்மா தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

நிலத்தைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நிலவருமானத்தில் சரியான பங்கு கொடுக்கப்படவேண்டுமெனக் கேட்கும் புது இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தினர் இன்று மகாத்மாவின் ஆசீர்வாதத்தை நாடினர். "பாடுபட்டவனுக்குக் கட்டாயம் பலனில் பங்குண்டு" என்ற வார்த்தைகளால் அவ்வியக்கத்தை ஆசீர்வதித்தார். உண்மையில் நிலத்தைப் பயிரிடுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தமாகும் எனக் குறிப்பிட்டார். இயக்கத்தை ஆசீர்வதித்ததோடு மகாத்மா நின்றுவிடவில்லை. இயக்கத்தினர் நடந்து கொள்ளவேண்டிய உயர் நீதிகளையும் எடுத்துரைத்தார். 'இலட்சியம் எவ்வளவு சிறந்ததாகவிருந்தாலும் அதையடையப் பலாத்

### 50 ஆண்டுகளுக்கு முன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கமாகிய அவரது முகாரவிந்தப் பிரகாசமே பிரகாசம்! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் ஆறு குற்றங்களையும் ஒரு நொடியிற் சுட்டெரித்து எதிர்ப்பட்டோர் யாரையும் ஆனந்த பரவசத்தராக்கி விட்ட அவரது கட்பார்வையினது வசீகரமே வசீகரம்! கேட்டோர் மனங்களைக்கொண்டு அவர்கள் செவிகளிலே புத்தமிர்த வாரியை ஒய்வின்றி யள்ளியிறைத்தாலென்ன, இனிமையோடு அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பிரசங்கங்களினது அலங்காரமே அலங்காரம்! புத்தரை வாதில் வென்ற ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளினது திருவவதாரமோ அன்றிச் செக்கர் வானிறத்தனாகிய எம்பிரானே எமக்குபதேசஞ் செய்யுமாறு மானுடச் சட்டை பூண்டெழுந்தருளிய குரு வடிவந்தானோ எம்முன்னே நிற்கும் வடிவமென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமியவர்கள் மகத்துவம் எம்மாற் சொல்லுந் தகைத்ததோ? அன்று! அன்று! சுவாமியவர்கள் வந்தனோபசாரப் பத்திரிகைக் களித்தவிடை அங்கிருந்தோர் யாவருக்கும் மனக்கிளர்ச்சியை யுண்டாக்கியது. சமயாபிமானம், தேசாபிமானம் ஆதியவைகளைப்பற்றியே பெரிதும் வற்புறுத்திப் பேசினர், அப்பால் ஸ்ரீ அப் கனகசபையவர்கள் சபையார் யாவர்க்குமாகச் சுவாமியவர்களுக்கு ஸ்துதி கூற அற்றைநாட் கூட்டம் சமாப்தியாயிற்று, அடுத்தநாள் சுவாமியவர்கள் 'மார்க்கம்' என்பதைப் பீடிகையாகக் கொண்டு ஓர் பிரசங்கம் செய்தனர்.

### தொழிலாளர்க்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரர் எ. ஈ வீரசூரிய, வண சுவாமி பீற்றர்ப்பிள்ளை, ஸ்ரீ தாஸ்குப்தா என்பவர்கள் அங்கத்தவர்களாவர்.

இந்த விசாரணைச்சபையினர் தொழிலாளராயுள்ளார் அனைவர்க்கும் பொதுவான ஓர் தேசிய சேமநிதி இருக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஓர் தொழிலாளி தன் மாதவருமானத்தில் 100க்கு 5 விகிதம் கொடுக்கவேண்டும். அவரிடம் வேலைவாங்கும் முதலாளியோ, ஸ்தாபனமோ அத்தொழிலாளியின் பேரால் இன்னும் ஓர் 5 விகிதம் உதவவேண்டும். அதாவது மாதம் 100 ரூபா வேதனம் பெறும் ஓர் தொழிலாளியின் கணக்கில் முதலாளி 5 ரூபாவும் தொழிலாளி 5 ரூபாவாகவுமாக 10 ரூபா மாதந்தோறும் சேமிக்கப்படும். இப்படியே மாதந்தோறும் சேருந்தொகை, இத்தொழிலாளி வயோதிபம் அடைந்தகாலத்தில், அல்லது வேலைசெய்ய முடியாத காலத்தில் சேர்ந்த வட்டியுடன் சேர்த்து ஓர் முதலாகக் கொடுக்கப்படும். இந்த ஆலோசனையை ஷை விசாரணைச்சபை தெரிவித்திருக்கிறது

விசாரணைச்சபையின் சிபாரிசினை இப்போது மந்திரசபையினர் ஆராய்ந்து வருகிறார்கள்,

கார வழிகளைக் கடைப்பிடிக்கக் கூடாது" என்று அவர்களுக்கு [illegible] னர்.

# வேலை இல்லாவிட்டால்!

## அரசாங்கம் சகாயம்செய்ய முயற்சி

ஓர் தொழிலாளி பலவித காரணங்களினால் வேலையிழக்கக்கூடும் அப்படி அவன் வேலையற்றிருக்கும் காலத்தில் அவன் எப்படித் தன்னையும் தன் குடும்பத்தையும் சம்ரக்ஷணை செய்யமுடியும்? இந்தப் பிரச்னையைப்பற்றி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள சமூகசேவா விசாரணைச்சபை ஆராய்ந்து ஓர் சிபாரிசைச் செய்திருக்கிறது.

தொழிலாளி வேலையற்றிருக்கும் காலத்தில் அவனுக்கு உதவி செய்தற்கான ஓர் ஸ்தாபனம் அரசாங்க ஆதரவில் இருக்க வேண்டும் என்று குறித்த சபை சிபாரிசு செய்திருக்கிறது.

இந்த ஸ்தாபனத்தின் மூலமாக, ஓர் வேலையற்றுள்ள தொழிலாளிக்கு வாரந்தோறும் 10 ரூபாவாவது குறைந்தபட்சம் உதவப்படல் வேண்டும் என்றும், ஆனால் இந்தச் சலாக்கியத்தைத் தொழிலாளிகள் துர்விநியோகப்படுத்தாமல் இருப்பதற்கு, இப்படியான உதவிப் பணம் குறித்த ஓர் காலவெல்லை வரைக்குந்தான் கொடுக்கப்படும் என்றும், அதற்கிடையில் குறித்த தொழிலாளி வேலையைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்றும், சமூக சேவை விசாரணைச் சங்கம் சிபாரிசு செய்கிறது

ஆனால் தீயொழுக்கம் காரணமாக, அல்லது தக்க காரணமின்றி ஓர்வேலையினின்றும் விலகும் ஓர் தொழிலாளிக்கு இந்தச் சகாயப்பணம் உதவப்படவொண்ணாது என்றும் இந்த விசாரணைச்சபை விதித்திருக்கிறது.

வேலையில்லாக் காலத்தில் தொழிலாளிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஓர் ஸ்தாபனத்தை அரசாங்கம் அமைக்குமானால் அதற்கு அரசினர் 3கோடியே 50லட்சம் ரூபா ஆண்டுதோறும் உதவிப்பணம் கொடுக்கவேண்டும் என்பதும் விசாரணை சபையின் சிபாரிசுகளில் ஒன்றாகும்.

### பஸ்நிலையம்

புகையிரதங்களிற் பிரயாணம் செய்வோர் ஏறி இறங்கும் புகையிரதஸ்தானங்களைப்போல, பஸ்கம்பனிகளும், பிரயாணிகளின் வசதியை உத்தேசித்து பஸ் நிலையங்கள் ஸ்தாபிக்க முன்வந்திருக்கிறார்கள்: இப்படியான ஓர் பஸ் நிலையம் முதன்முதலாக ஜாஎலா (நீர்கொழும்புப் பாதை)யில் சென்ற செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் திறப்பு விழாவுக்கு இலங்கை மந்திரிகளில் அறுவர் விஜயம் செய்திருந்தனர்.

### நீடிக்கப்பட்டது

#### அரசாங்கசபை ஆயுள்

அரசாங்கசபையிலுள்ள காலம் மார்ச்மாதம் 10ம் திகதியுடன் முடிவடையவேண்டும். ஆனால், சென்ற புதன்கிழமை மந்திரசபையினர் கூடி, அரசாங்கசபையின் காலவெல்லையை இன்னும் 4 மாதகாலத்துக்கு நீடிக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். அப்படியே தேசாதிபதிக்குச் சிபாரிசு செய்தனர்.

இந்தச் சிபாரிசினைத் தேசாதிபதியவர்கள் அங்கீகரித்துக் கொண்டார்.

### மத்தியமாகாணத் தலைவர்

இப்போது உணவு விஷப அதிகாரிகாயுள்ள ஸ்ரீ கே வைத்தியநாதன், மத்தியமாகாணத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்னும் சில தினங்களில் தமது கடமையைக் கையேற்பார்.

## 13 கோடி ரூபா!

### இறக்குமதி வரி

1946ம் ஆண்டில் இறக்குமதித் தீர்வையினால் மாத்திரம் இலங்கையரசாங்கத்துக்கு ரூபா 133,467,609-07 கிடைத்திருக்கிறது.

புகையிலை, சிகரற் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரியினால் மட்டும் 45,539,962 ரூபாவும், மற்றும் பொருள்களின் மீதுள்ள இறக்குமதி வரியினால் 40, 213, 589 ரூபாவும் கிடைத்தன.

தேயிலை, றபர் ஏனைய பொருள்களின் ஏற்றுமதித்தீர்வையினால் முறையே 8,680,806 ரூபா 5,773,672 ரூபா, 14,635,132 ரூபா கிடைத்தன.

துறைமுகங்களினால் 1946ம் ஆண்டில் 7,785,579 ரூபா கிடைத்தது.

### வரிகள் இருந்தேதீரும்

பெற்ரோல், புகையிலை, சிகரெற் வகை, சுருட்டு, பீடி, குடிவகை என்பவற்றின்மீது சென்ற 1945ம் ஆண்டு செப்டெம்பர்மாதம் மேலதிகமான தீர்வை விதிக்கப்பட்டது. இத்தீர்வை இந்த ஆண்டு செப்டெம்பர்மாதத்துடன் தவிர்க்கப்படவேண்டியதே ஒழுங்கு. ஆனால் அப்படி அத்தீர்வையைத் தவிர்க்காமல், இன்னும் தொடர்ந்து நடத்திவைக்க வேண்டும் என்று நிதிக்காரியதரிசியான சேர் ஒலிவர் குணத்திலகா அரசாங்க சபையில் ஓர் பிரேரணையை எடுத்தாளுவார்.

### 1,550 மோட்டர்வண்டிகள்

சென்ற ஆண்டில் இலங்கையிலே 6,145,517 ரூபா பெறுமதியான 1,550 மோட்டார் வண்டிகள் இறக்குமதியாயிருக்கின்றன.

### சமரசம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

மந்த நிலையை அடைந்ததென்றும், ஸ்ரீமத் விவேகானந்தரின் போதனைகளால் துயின்றுகொண்டிருந்த இந்துக்கள் துயில் நீத்து எழுந்தனரென்றும் கூறினர்.

சமூகத்திலே சாதி, மத வகுப்புப் பிரச்னைகள் எழப்படாதென்றும் எல்லோரும் சமமென்று எண்ணி வாழ்ந்துவருவதும் ஒருவருக்கொருவர் சேவைபுரிவதும்தான் இந்துமக்களை மட்டுமின்றி உலகத்தினரையும் உய்விக்குமென்றும் இந்து சமூகம் பெலங்கொண்டதாக திடமாக நிற்பதற்கு அதன் சமூகத்தில் உள்ள குறைவுகள்யாவும் களைந்தெறியப்பட வேண்டுமென்றும்கூறி முன்னேற்றத்திற்கான வழிகள்பற்றியும் தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர், கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிதுமுடிவடைந்தது.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

யோடு சொன்னாள். இவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டு புவனேசுவரி சிவபாக்கியத்திற்குத் தேறுதல் சொல்லித் தான் சீக்கிரம் அவளை வந்து காணுவதாகவும் தெரிவித்து அவளிடத்தும் அவள் தாயிடத்தும் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டிற்குக் குழந்தையோடு மீண்டாள்.

### "கடந்துளோர்களுங் கடப்பரோ? மக்கள்மேற் காதல்"

புவனேசுவரி அவ்விடம் விட்டகன்றபின்னரும் சிவபாக்கியம் சிந்தனையோடு கூடியவளாகவே யிருந்தாள்; இவ்வாறாக அவளுடைய மாமனாகிய விநாயகமூர்த்தி தம் தங்கையையும் மருமகளையும் பார்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அங்கே வருதலும், தலைவாசற்பக்கத்தில்நின்ற கண்ணகியம்மை தன் தமயனை வரவேற்று உபசரித்து இருக்கச் செய்தாள்; வந்த தமயனார் தங்கையோடு தம்மகன் விஷயமாகவும் பேசிக்கொண்டிருந்தார்; மாமனார் வந்திருப்பதைத் தன் அறையுட் கவலையோடிருந்த மருமகள் அறிந்திலள்; அவள் உலகமாதாவாகிய ஈசுவரியைத் தனக்குத் திருவருள் செய்து தன் சஞ்சலத்தை நீக்கவேண்டுமென்று நிச்சயித்தவளாய்த் தேவியைச் சிந்தனைசெய்தபடி,

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து
நீமுத்தந் தாஎன் றவர்கொஞ்சும்
வேளையில் நித்த நித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல்
லாம் மெல்ல மெல்லச் சொன்னால்
வாய்முத்தஞ் சிந்திவிடுமோ நெல்
வேலி வடிவம்மையே"

என்ற தோத்திரப்பாட்டைப் பத்திரசம் பெருகக் கல்லுங் கரையும்வண்ணம் தன்னை மறந்து சற்றுப் பெலத்துப் பாடினாள்; அப்படிப் பாடும் ஓசை விநாயகமூர்த்தியாருடைய காதிற்பட்டமாத்திரத்தே, அவர்தங்கையோடு கதைப்பதை நிறுத்தித் தம் காதாரஉற்றுக் கேட்டவண்ணமிருந்தார்; அவரும்மனமுருகியவராய், தம் சகோதரியை நோக்கி "பாடுவது ஆர் தங்கைச்சி? என் அருமைமருமகளா" என வினவுதலும் "ஓம், அண்ணை, தங்கைச்சிதான், என்ன சமாதானத்தை நாம் சொன்னாலும் எங்கள் பிள்ளை உங்கள் மகனையிட்ட கவலையோடு கூடியவளாகவேயிருக்கிறாள்; நான் இன்று உங்கள் வீட்டிற்கு வந்து பிள்ளையின் கவலையைப்பற்றி உங்களுக்குச் சொல்ல எண்ணியிருந்தேன்; அதற்கிடையில் நீங்கள் இங்கே வந்துவிட்டீர்கள்; தங்கைச்சியின் விஷயமாக என்ன செய்வதென்று எனக்குப் புலப்படவில்லை அண்ணை" என்று விசனத்துடன் சொன்னாள் கண்ணகியம்மை; "தங்காய், எங்கள் மகன் விஷயமாக, பெற்றாராகிய எங்களைக் காட்டிலும் மாமி மச்சாளாகிய உன்னையும் உன் மகளையுங் காட்டிலும், எங்கள் அருமை மருமகளே அதிகங் கவலைப்படுகிறாளென்பதை நான் நன்கறிவேன்; மருமகளுக்குத் தேறுதல் சொல்லத்தான் இங்கே இப்பொழுது வந்தேன்: ஆனால் இந்தப் பிள்ளையின்முன்னிலையிற்போய் நான்என்ன விதமாகத் தேறுதல் சொல்வதென்பது புலப்படவில்லை; என்னைக் கண்டவுடனே எங்கள் மருமகள் இன்னும் அதிகமாகக் கவலைப்படுவாள்; அதனைப் பார்த்தவுடன் என் வயிறும் பற்றியெரியும், நான் பெருஞ் சத்தமிட்டுக் கதற நேர்ந்தாலும் நேரும், இவைகளையெல்லாம் யோசித்துக்கொண்டுதான் பிள்ளையாருக்கு மிடத்திற்குப் போகக் கூசி, இந்தத் தலைவாசலில் இருக்கிறேன்; தங்காய் பிள்ளைப் பாசம் கொடிது! கொடிது! கடந்துளோர்களுங் கடப்பரோ மக்கள்மேற் காதல் என்றல்லவா முன்னோர் பாடியிருக்கிறார்கள்; என் செய்வேன் கொள்ளித்தலையில் எறும்பதுபோல உள்ளங் குலைகின்றேன்" என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிமுடித்தார்.

### "உள்ளக் கவலை எல்லாம் ஒழியும்"

"அண்ணை அறிவு அநுபவம் வயசு எல்லாவற்றிலும் முதிர்ந்த நீங்களே இப்படிக் கலங்கும்போது, ஒன்றும் அறியாப் பேதையான என் பிள்ளை என்ன செய்வாள்? என் மகனுக்கும் உங்கள் மகனுக்குமிடையே எவ்வகையான பேதமும் பாராட்டியறியாள் என் பிள்ளை; அது உங்களுக்கு நல்லாய் விளங்கும்; ஆனதால் நான் அங்கே வரவில்லை, நீங்களே உங்கள்மருமகளிருக்கும் அறைக்குப் போய் அவளுக்குத் தேறுதல் சொல்லுங்கள்" என்று பரிவுடன் சொன்னாள் கண்ணகியம்மை. "ஆம், தங்காய், அப்படித்தான் செய்யப்போகிறேன்" என்று சொல்லிக்கொண்டு இருக்கைவிட்டெழுந்து தமது மருமகள் இருக்கும் அறைவாசலண்டை போனவுடன் 'தங்கைச்சி, உங்கே வரலாமா" என்று இதமாக வினவ, அப்பொழுதுதான் தன் மாமனாருடைய வரவையறிந்த சிவபாக்கியம், திடுக்குற்றுச் சரேலென எழுந்து தன் முன்றானையாற் கண்களைத் துடைத்துவிட்டுத் தலையையும் முகத்தையும் சரிப்படுத்திக்கொண்டு "வாருங்கள் மாமா," என்று சொல்லியபடி எதிர்கொண்டு அறையுள் அழைத்துக் கொண்டுபோய் ஆசனமிட்டு உபசரித்துத் தன் கவலையைப் புறத்தே காட்டாதவளாய் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றாள். ஆனால் அவள் முகத்தைப் பார்த்துப் பேசுவதற்கு விநாயகமூர்த்திக்கு அவர் கொண்ட புத்திரசோகம் சில நிமிஷம் இடங் கொடுக்கவில்லை; பின்னரும் அவர் தாம் கொண்ட கவலையைப் புறத்தே காட்டினால், தம் மருகி மேலும் மேலுங் கவலைப்படுவாளென்றஞ்சி, அவளை ஆதரவுடன் பார்த்து, 'நான் ஒரு அரைமணி நேரம் முந்தியே இங்கு வந்து தலைவாசற் பக்கத்திலிருந்து உங்கள் தாயோடு பேசிக்கொண்டிருந்துவிட்டேன், அப்பொழுது தேவிக்குத் தோத்திரமாக நீ படித்த பாட்டு என் காதிற் பட்டது; அதனை இன்னுமொருமுறை கேட்க ஆசைப்படுகிறேன், உங்கள் மாமாவுக்குப் படித்துக் காட்டடியம்மா" என்று வெகு இதமாகக் கேட்டார். கேட்டமாத்திரத்தே சிவபாக்கியம் மனங் கூசியவளாய், "மாமா, நீங்கள் தலைவாசற்புறத்து இருக்கிறீர்களென்பதை அப்போது அறிந்திருந்தால் நான் ஒருபோதும் படித்திருக்கமாட்டேன்; அந்தப் பாட்டைப் படிக்கச் சொன்னாற் படிக்கிறேன் மாமா: படித்தால் எனக்குக் கவலை அதிகப்படுமென்று பயப்படுகிறேன்" என்று நிலத்தைப் பார்த்தவண்ணம் கள் சொல்ல, "கவலையல்ல, அந்தப் பாட்டைப் படிக்கும்போது தேவியின்மேற் பக்திதானடியம்மா, அதிகப்படும்; அதனோடு உள்ளக் கவலையெல்லாம் ஒழியும்" என்று ஆதரவாகச் சொன்னார். மருமகளும் மாமனார் சொல்லைத் தட்ட மனமில்லாளாய் அந்தப்பாட்டை முன்படித்தவாறு படித்தாள்; படித்து முடிப்பதற்கிடையில், அந்தப் பாட்டிலே பொதிந்துள்ள அருமையான கருத்தையும் பாட்டின் சிறப்பையும் படித்த இனிமையையும் எண்ணியெண்ணி மாமனார் மனமுருகினார், கண்ணீர் சிந்[illegible] களில் நீர் தா[illegible]

நாத்தடுமாறி விம்மலுண்டாக ஈற்றடி [illegible] முடித்தான்.

—வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாக விஞ்ஞாபனம்

### சிவபாதசுந்தரம்—பொன்மலர்

திருவருளை முன்னிட்டு நிகழும் தைமாசம் உஎ-ம் வ (9-2-47) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 8 மணிவரையில்வரும் கன்னிலக்கின சுப முகூர்த்தத்தில், சண்டிருப்பாய் வீ. செல்லையா அவர்களின் புதல்வரும், குருநாகலைச் சேர்ந்த கிரியுல்லா அரசினர் வைத்தியசாலையில் "அப்போதிக்கரிஸ்" உதவி டக்ரராகக் கடமை பார்ப்பவருமாகிய திருவளர்செல்வன் சிவபாதசுந்தரத்துக்கும், வண்ணார்பண்ணை ஐயனார்கோவிலடி, சட்டநாதர் தம்பி (பொன்னுச்சாமி) அவர்கள் சியேட்ட புதல்வி திருவளர்செல்வி பொன்மலரம்மாளுக்கும் மணமகள் இல்லத்திற்றனே விவாகம் நடத்திவைக்கப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், அச்சமயம் சுற்றமித்திரர்சகிதமாகச் சமுகஞ்செய்து தம்பதிகளை ஆசிசெய்யும்வண்ணம் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அடுத்த நாளாகிய திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் மணமகளில்லத்தில் உபசாரணைக்கொண்டாட்டம் நடைபெறும்

[ பிரத்தியேகமான அழைப்புப்பத்திரம் அனுப்பவில்லை ]

சி. சபாரத்தினம்
(மேற்படி மணமகளின் பேரன்)

வண். வடமேற்கு, ஐயனார் கோவிலடி 3-2-47
(Mis. 319—4 & 7-2-47)

## அரிசி நிலை

### பர்மா அரிசி வருமா?

இப்போது பர்மாவின் அரசியல் நிலைமை ஓர் ஸ்திரமானதாகவில்லை. அங்கே குழப்பங்கள நடப்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன அப்படியானால், வருகிற மார்ச்மாதத்துக்கு, ஆங்கிருந்து இலங்கைக்கு வரவேண்டிய அரிசி கிரமப்படி வருமோ என்பது சந்தேசமாயிருக்கிறது.

பர்மாவில் இருந்து வரவேண்டிய அரிசி மார்ச்மாதத்திற் கிடைக்காவிட்டால், பிரேஸில் எகிப்து முதலிய நாடுகளில் இருந்து வேண்டிய அரிசியைப்பெற முயற்சிகள் செய்யப்படுகின்றன என்று உணவுப்பகுதி அதிகாரி திரு. ஆள்வாப்பிள்ளை அறிவிக்கின்றார்.

மாவின் நிலைமை இப்போது மிகவும் திருப்திகரமாகவிருக்கின்றது.

## வலிகிழக்கு ஐக்கியமோட்டார் ஏற்றுமதிச் சங்கம்

ஷெ பெயரிய சங்கமொன்று 1-2-47 சனிக்கிழமை மாலை ஏழு மணிக்கு, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் ஸ்தாபிதமானது. அதிகார் A. நாகநாதர் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் அவர்களாலும், திருவாளர்கள் R. S. எட்வேட்ஸ், பண்டிதர் S. துரைசிங்கம் E. குமாரசுவாமி, P யேசுதாசன், திரு. கிருஷ்ணர் முதலியோர்களாலும், சங்கத்தில் அவசியம் செய்யவேண்டிய ஆக்கவேலைகள், அதனால் அடையக்கூடிய நன்மைகள் என்பனபற்றி விளக்கமாகக் கூறப்பட்டன. திரு N. தாமோதரம்பிள்ளை அவர்களால் ஐக்கியசங்க அமைப்புமுறைபற்றிக் கூறப்பட்டது. பின்னர் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் அதிகார் A. நாகநாதர், தலைவர் R. S. எட்வேட்ஸ், உபதலைவர்கள் K. சிவகுரு, A. அருணாசலம், காரியதரிசி P. மண்டலசேகரம், உபகாரியதரிசி S. சேனாதிராசா, தனாதிகாரி S. சுப்பிரமணியம். பின்னர் இவர்களுட்பட 21 பேர் கொண்ட நிர்வாக சபையினர் தெரியப்பட்டனர்.

— கடிதம்

## நூற்குறிப்பு

### சுகாதார விளக்கம், முதற்பகுதி

இந்நூல் பள்ளிக்கூடங்களில் நான்காந் தரத்திற் கல்வி பயிலும் தமிழ்ச் சிறுவர் சிறுமிகளாகிய மாணவர்களுக்கு உபயோகமாகும்வண்ணம் ஆசிரியர் கொஸ்மஸ் W. D. சல்வினஸ் அவர்களால் இயற்றி, காரைநகர் திரு. மு. துரைசிங்கமவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இந்நூலகத்தில், சிறுவர் சிறுமியர் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வசனநடையும், சுகாதாரத்தைப்பற்றியனவும் பிள்ளைகள் ஆர்வத்தோடு படிக்கத்தக்கனவுமாகிய நொண்டிச்சிந்து, கும்மி முதலிய பாட்டுக்களும், சுகாதார முறையை விளக்கும் பல சித்திரங்களும் சில படங்களுங் காணப்படுகின்றன. இதில் எடுத்தாண்டுள்ள கும்மிப் பாக்கள், நவாலியூர் திரு. சோமசுந்தரப் புலவர் பாடியன; இவை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருடைய அநுமதியுடன் அநுவதிக்கப்பட்டனவென அறியலானோம். பிரதி தெளிவான பெரிய அட்சரங்களில், "கிறவுன்" எட்டுப் பிரமாணமுள்ள 90 பக்கங்கள் வரையிற் கொண்டதாய் அழகுற அச்சிட்டுக் கட்டப்பெற்றுள்ளது பிரதியொன்றின் விலை 1 ரூபாவாகும்,

### சுகாதார விளக்கம் இரண்டாம்பாகம்

இந்நூலும் மேற்படியாசிரியரால் இயற்றி, குறித்த திரு. மு துரைசிங்கமவர்களாலேயே மொழிபெயர்க்கப் பெற்றதாகும்; இது ஐந்தாந்தர மாணவர்க்கு உபயோகமாகும்வண்ணம் இயற்றப்பெற்றது. இதன்கண்ணும் சுகாதார முறையை விளக்கும் பாட்டுக்கள், படங்கள் சித்திரங்கள் முதலியன விரவியுள்ளன; குறித்த ஆக்கியோன் இயற்றிய இந்நூலின் இரு பாகங்களும் இலங்கைவித்தியாபகுதியார் விதித்துள்ள சுகாதாரக் கல்வி முறைக்கு இணங்கியனவாகும்; இரண்டாம் பாகம் பிரதியொன்றன் விலை ஒன்றரைரூபாவாகும்.

இப்புத்தகங்களின் விற்பனை உரிமையாளர், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை எஸ். எஸ். சண்முகநாதன் அன் ஸன்ஸ்; புத்தகசாலையாராவர். எமது பார்வையின் பொருட்டு உதவிய பிரதிகளை உவந்தேற்றாம்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி பிப்ரவரி 8

காலை 7-15 கிராம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எஸ் நாராயணசாமி ஐயர் வயலின் 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8.15 வேட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 8.30 காலை இசை 9 முடிவு.

1 எம் எஸ் நாராயணசாமி ஐயர் வயலின் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள 2.05 ஆங்கிலப் பேச்சு 2.15 வேட்டனூர் டி எஸ் மதுரம் சகோதரிகள் பாட்டு 2.45 முடிவு.

மாலை: 5 திருவெண்காடு டி மி எஸ் செல்வரத்தினம் பாட்டு 5.40 திருவரங்கத்தந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில்செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 திருவெண்காடு டி மி எஸ் செல்வரத்தினம் பாட்டு 7.15 நாணய மதிப்பு 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதாசிலன்னபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி என் ராஜரத்னம்பிள்ளை நாகஸ்வரம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்பகள் வானிலை 9.45 கடத்தூர் சங்கராமய்யர் வீணை 10 இசை வேளை 10-30 முடிவு.

### ஞாயிறு பிப்ரவரி 9

காலை: 7-15 கிராம்பம் 7-20 தமிழ்ச் செய்திகள் 7-30 கே வி நடராஜன்பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 எல்சுசிலாதேவி வீணை 9 முடிவு

12 கதம்பம் 12.30 யார் இவர் 12.40 மலரும் பூ 12.45 உடையாத பொம்மை 12.55 ஒடிப்போன மாப்பிள்ளை 1 பணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மூன்று வயலின்கள் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை: 5 காரைக்கால் எஸ் சுந்தரகாமாக்ஷி பாட்டு 5-40 தேவாரதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 காரைககால் எஸ் சுந்தராகாமாக்ஷி பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 எல் சுசிலாதேவி வீணை 8-30 கே வி நடராஜன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள 9.15 குரல்வகை 9.30 லண்டனிலிருந் செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி சூர்யகுமாரி 10 வாத்ய இசை 10-30 முடிவு.

### திங்கள் பிப்ரவரி 10

காலை 7.15 கிராம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7.30 ஏ டி ராமச்சந்திரன்நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8.30 கே வாசுதேவன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே ரங்கைய பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள 2.05 எஸ கே ரங்கைய பாகவதர் பாட்டு 2-15கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5: ஏ டி ராமச்சந்திரஸ் நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே என் ராஜம் கே என் கமலம் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுய ஆட்சி இத்தாலியில் 8 கே வாசுதேவன் பாட்டு 8-30 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சிதம்பரம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 சி தியாகராஜன் ஜலதரங்கம் 10 இசை வேளை 10-30 முடிவு.

### செவ்வாய் பிப்ரவரி 11

காலை 71-5 கிராம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மாயவரம் கே என் பக்ஹரிசாமி. பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை 8-30 டி எஸ் சுப்புலக்ஷ்மி புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எஸ் சுப்பலக்ஷ்மி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள 2 05 டி எஸ் சுப்புலக்ஷ்மி புல்லாங்குழல் 2.15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5: பாபநாசம் கே என் பக்கிரிசாமி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலக்கிய வாசகர் 7-15 இந்தவாரம் தாவாய் 7.20 தமிழில் செய்திகள் 7-45 பாலக்காடு ராம பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 குரல்வகை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 பியானோ சாக்ஸபோன் 10நீங்கள் கேட்டவை 10.30 முடிவு.

## 20 லட்சம் யார் இளக்கநூல் துணி

இப்போது இலங்கையில் உள்ள புடைவை வர்த்தகரிடம் பெருந்தொகையான இளக்கநூற் புடைவைகள் இருப்பில் இருக்கின்றன. இவற்றில் அநேகமானவற்றை ஒருவாறு விற்றுவிட்டபோதிலும் இன்னும் 20 லட்சம் யார்ப் புடைவைகள் கைவசமாக இருக்கின்றன. இவற்றைக் கூப்பனுக்கு விற்றுக்கொள்ளுதல் அரிது. ஆகவே கூப்பனின்றியே அவற்றை விற்பனை செய்ய அநுமதிதர வேண்டுமென்று இவ் வியாபாரிமார் கேட்டிருக்கிறார்கள்.

## பண்டிதர் மாளவியா ஞாபகார்த்தம்

காலஞ்சென்ற இந்தியத் தலைவர் பண்டிதர் மதன்மோகன் மாளவியா அவர்கள் ஞாபகார்த்தமாக காசி ஹிந்து சர்வகலாசாலையிற் கல்வி அபிவிருத்திசெய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு 17பிரமுகர்களடங்கிய ஓர் நிருவாகசபை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

## றங்கூன் திரும்பினர்

லண்டனுக்கு விஜயஞ் செய்து, பர்மா அரசியல் விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சம்பாஷணைகள் நிகழ்த்திய பர்மியப் பிரதம சேனாதிபதி ஆங்ஸேன் சென்ற ஞாயிற்றுக்கிழமை றங்கூனுக்கு மீண்டார்.

## மகாத்மாவின் கால் நடைப் பிரயாணம்

மகாத்மா காந்தியடிகளின் கால்நடைப் பிரயாணத்தினால், கிழக்கு வங்காளத்தில் சமூக ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் மெல்ல மெல்லவாகத் தோன்றி நிலைபெறுகின்றன என்று வங்காளத்துப் பிரதம மந்திரி மிஸ்ரர் ஹாஸன் ஷுஹ்ரவர்த்தி சென்றவாரம் ஓர் பத்திரிகைச் செய்தி ஸ்தாபனத்திற்குக் கூறினர்,

## தேசாதிபதி மீண்டார்

இங்கிலாந்திற்கு விஜயம் செய்த இலங்கைத் தேசாதிபதி சேர்மொங்கரன் மேஸன்மூர் சென்ற சனிக்கிழமை கொழும்புக்கு மீண்டுவிட்டார்.


## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

## தந்தரோகசஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 211 1.11.46—30-4-47 (வெ)

## India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம் 21-உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,
41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47


வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்


## NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்
### விற்பனைக்கு வந்துவிட்டன

யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள் அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க்காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele { Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI
Siri. Pathmanatha Store
105. K. K. S. ROAD
Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


## இந்துசாதனம்
### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள் ரூ. ச. | வெளியூர். ரூ. ச. | மலாய்நாட்டுக்கு ரூ ச |
|---|---|---|---|
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9-50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, February, 7, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org